தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி 2022 துலை (அக்—91) விலை உருபா 1-50 (இதழ் எண் : 149)

சிறை வைப்பதால் ஆட்சியின் குறைகள் சீராகிப் போகுமா?

இருந்து பார்த்தால்தான் தெரியும்!
இலாவிடில் சிறைத்துன்பம்
எவ்வாறு புரியும்? (இருந்து)

மருந்துக் காகிலும் ஒருநாள், ஒரு பொழுது
மானத்திற் காயினும் ஒருமுறை, ஓர் இரவு
திருந்திடு வார்கள் எனும்நம்பிக் கையில்
திருடரை முரடரை வைக்கின்ற சிறையில் (இருந்து)

மூட்டைப் பூச்சியும் ஈக்களொடு கொசுவும்
முடைநாற்றச் சாய்க்கடை நீரும்,கழி வறையும்
வேட்டை யாடிடும் காவலரும் நிறைந்து
வீணர்கள் குவிந்திடும் சிறைக்குள், ஓர் இரவு (இரு)

செயலலி தாவுடைக் கொழுவுடலும் ஒருநாள்
சிறையிருந் தாலுமே உருகிவிடும் மறுநாள்!
கயவரே என்னினும் மாந்தர்கள் அன்றோ?
கனிவோடு நடத்தினால் திருந்துவார் அன்றோ? (இரு)

மனநோயில் விழுந்தவர், மற்றவர்க்கே என்றும்
மாறுசெய் வம்பர்கள், கொள்ளையர்கள், கொலையர்,
முனம்பகை வெறியினர்-இவர்களுடன், அரசில்
முரண்படு வோரையும் ஒன்றென எண் ணுவதா?
(இருந்து)

அரசியல் பேசுவோர் கொடுமையா ளர்களா?
ஆட்சியில் உள்ளவர் நடுநிலையா ளர்களா?
உரசி டாமலே கருத்தோடு கருத்தை,
'உண்டு காவலர் படை' யெனும் மமதையர்- (இரு)

சிறையினுள் வைப்பதால் ஆளுமையின் குறைகள்
சீராகிப் போகுமா? ஆளுபவர் நினைக்க!
முறையாகக் கருத்தொடு கருத்தெதிர் வைத்து
முடிவு காண் பதனாலே எவர்க்கென்ன தொல்லை?
(இருந்து)

அவரவர் கருத்தினை ஆய்வுசெய் யாமல்,
ஆள்பவர் கருத்தேதான் சரியென்று கொண்டால்
தவறினைத் தவிர்த்திட இயன்றிடுமோ, சொல்வீர்;
தவறேதான் என்றாலும் சிறைசெய்தல் தீர்வோ?
(இருந்து)

அறிவியல் மிகுவளர் காலம் இஃ தன்றோ?
ஆள்பவர்க் கெதிர்சொல்வார்க் கிடர்தரல் நன்றோ?
குறிவைத்தே அவர்களைக் கொடுஞ்சிறை தள்ளல்
கொடுமையினும் கொடுமை! இதை அரசுசெவி
கொள்க! (இருந்து)

அரசின் சட்ட முரணான அடக்குமுறைகளை எதிர்த்து வழக்கு தொடர்வது தொடர்பாக, பதினைந்து நாள் சிறையிருப்பிற்குப் பின் பாவலரேறு அவர்கள் பொறுப்பில் வெளிவந்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

Scanned with CamScanner

பதவி, அதிகாரக் களிமயக்கத்தில் சட்டமன்ற உறுப்பினர்களின் உளறல்கள்!

முன்னுரை : அண்மையில் நடைபெற்று முடிந்த தமிழகச் சட்டப் பேரவைத் தொடரில், அவ்வப்பொழுது சட்ட மன்ற உறுப்பினர்களாலும், அமைச்சர்களாலும் திருவாய் மலர்ந்து அருளப் பெற்ற கருத்துகள் இவை:

அவர்கள் பேசிய பிற கருத்துகளை விட்டு விட்டு, அவர்களின் இந்த உளறல்களை மட்டுமே இங்குத் தொகுத்துத் தந்திருக்கிறோம். ஏனெனில் அக்கருத்துகளெல்லாம், அவர்கள் மக்களிடமிருந்து பெற்ற வரிப்பணச் சம்பளத்திற்கான **கடமை மொழிகள். ஆனால்,** இவ்வுளறல்களோ அவர்கள் முதலமைச்சர் அம்மையாரிடமிருந்து (அவர்கள் மொழியில் சொன்னால், 'மேட'த்திடமிருந்து) வாய்க்கரிசிக்கும் வயிற்றுச் சோற்றுக்குமாகப் பெற்ற பதவி. பயன்களுக்காகப் பேசிய **மடமை மொழிகள்.**

அவர்களின் கொடுந்தமிழ்க் கோணங்கிக் கொச்சை மொழி உளறல்களை அவர்கள் வெளிப்படுத்திய சொற்களிலேயே வெளியிடுகிறோம். அப்பொழுதுதான் அவற்றின் நீள அகலங்களும், குண மணங்களும் நன்கு விளங்கும். (தூய தமிழ் அன்பர்கள் இவ்விக்கட்டுக்காக நம்மைப்பொறுத்துக் கொள்வார்களாக.)

இவ் விந்தியாவிலும் சரி, வெளி உலக நாடுகளிலும் சரி, ஒரே சட்டமன்றத் தொடரில், இத்துணையளவு, வானளாவப் புகழப் பெற்ற தலைவர், செயலலிதாவைவிட வேறு எவருமே இருக்க முடியாதென்பதை உறுதியாகக் கூறலாம்.

இவற்றையெல்லாம் அமைதியாகக் கேட்டுக்கொண்டு அந்தப் 'புரட்சித் தலைவி' பலநாள்கள் ஒரு பெருமித உணர்வுடன் நாணாமல் கோணாமல், அங்கு அமர்ந்திருந்தாரே என்பதுதான் நமக்கு மிகவும் வியப்பாக இருக்கிறது. நீண்ட நெடும் புகழ்ச்சி உள்றல்களுக்குப் பின்னர் - அஃதாவது இனியும் உளற என்ன இருக்கிறது என்ற அறிவுணர்வு தோன்றி. 'இனி' என்னையே புகழ்ந்து உரைத்துரைத்து அரிதாகக் கேட்டுப் பெற்ற நேரத்தை வீணடிக்காமல் கூற வந்த கருத்தைச் சொல்லி முடியுங்கள்' என்ற செல்லக் கண்டிப்பை உறுப்பினர்களிடம் கூறியுள்ளார்.

மேலும், செல்வி செயலலிதாமேல் செலுத்திய இப் புகழ்ச் சுமைகளுக்கும் !உளறல்களுக்கும் ஈடாக, இத்தமிழ்நாட்டில்தான் -இந்த நூறு நாள்களுக்குள் (இந்த நூறாவது நாளை சில வெட்கங் கெட்ட பார்ப்பன இதழ்கள் வேறு, சில திரைப்படங்கள் ஓடிய நூறாவது நாளைப் பெரிய பெரிய சுவரொட்டி அடித்து வெற்றி விழா கொண்டாடுவதுபோல், பார்ப்பனீயச் செயல் திறனை(!)க் கொண்டாட)— என்னதான் நடந்துவிட்டது என்று, இன்னும் நமக்கு உண்மையாகவே விளங்கவில்லை.

இதை, 'அவாள்' இன முன்னேற்றத்திலேயே மிகக் கூர்மையாகக் கவனம் செலுத்தி வரும், முன்னாள் நடுவண் அமைச்சரும், 'சமாசவாதி சனதா கட்சித் தலைவர்களில் ஒருவருமான திரு. சுப்பிரமணியம் சுவாமி அவர்களே, வெட்ட வெளிச்சமாகக் கூறியுள்ளதை, முதலமைச்சர் பொறுப்பேற்றிருக்கும் செல்வி செயலலிதா அவர்களும், அவரின் பாதந்தாங்கிச் சட்டமன்ற உறுப்பினர்களும் அவரின் நிழலாகவே ஒட்டிக் கொண்டு உலா வரும் அமைச்சர்களும் கவனிப்பது நல்லது.

அவர் கூறியுள்ளது இது: (பார்க்க தினமணி 3-10-91 - சென்னைப் பதிப்பு)

'செய்தியாளர்கள் செயலலிதாவின் 100 நாள் ஆட்சி பற்றிக் கேட்டதற்கு, சட்ட ஒழுங்கைப் பொறுத்தவரை, நன்றாக இருப்பதாகக் கூறினார். ஆனால் 'பொருளாதார - தொழில் துறைகளில் உருப்படியான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. உறுதிமொழிகள்தாம் அளிக்கப்பட்டுள்ளன'—என்றார் அவர்.

இத்துடன் அவர் கருத்தை நிறுத்திக் கொள்ளாமல், அவர் மனத்தை உறுத்துகின்ற செய்தி ஒன்றையும் செய்தியாளர்கள கேட்காமலேயே தக்க நேரத்தில் எடுத்துக் கூறியிருக்கிறார். அ'து இது:

'தமிழக அமைச்சர்களும் சட்டப் பேரவைத் தலைவரும் (பிற உறுப்பினர்கள் பலரும்) செயலலிதாவின் கால்களில் விழுந்து ஆசி பெறுவது வேதனைக்குரியது' என்று அவர் கூறினார்.

சட்டமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் சட்டப் பேரவைத் தலைவரும் செயலலிதாவின் கால்களில் விழுவது சுப்பிரமணியம் சுவாமிக்கு 'வேதனைக்'குரியதாக இருக்கிறதாக அவர் கூறுகிறார். ஆனால் அவரைக் கடவுளாகவே நினைத்து வழிபடும் பக்தர்களைப் பற்றி என்ன நினைப்பாரோ தெரியவில்லை. ஒருவேளை அதற்காக அவர் மகிழ்ந்தாலும் மகிழலாம், தன் இனப் பெருமையை மனத்துள் எண்ணி. ஏனெனில் காஞ்சியில் ஆண் வடிவில் நடமாடும்

கவனிக்க : 6-ஆம் பக்கத் தொடர்ச்சியை 11-ஆம் பக்கம் பார்க்க.

ஒரு மடத்தெய்வம் இருப்பது போல், சென்னையிலும், பெண் வடிவில் நடம் (நடனம்) ஆடும் ஓர் அரசியல் தெய்வம் இருப்பதை அவர் உணர்ந்து மகிழலாம் அன்றோ! (செயலலிதா தன் 'பூர்வீக' வரலாற்றில், '(அவர்கள் அவ்வாறு சொல்லிக் கொள்வதுதான் வழக்கு!) வெறும் திரைப்பட, நாடக நடிகையாக இருந்து நடனம் ஆடியிருந்தாலும், இன்றும் அந்தப் பெருமை அவர்க்கு உண்டுதானே!

தமிழர்களிலும் பலர், எத்துணையளவு இளித்தவாயர்களாகவும், பதவி, பணம், பகட்டு(பவிசு) இவற்றுக்கு அடிமையர்களாகவும், பகுத்தறிவு இழந்தவர்களாகவும், தன்மானமற்றவர்களாகவும் உள்ளார்கள் என்பதற்கு இக்கால கட்ட, சட்ட மன்ற உறுப்பினர்களின் வஞ்சகப் புகழ்ச்சி உளறல்களே சான்று! தமிழினத்தில் இப்படியும் ஒரு பீநாறிக் கூட்டமும் இருக்கிறதே! இஃதென்ன கொடுமை! அறியாமை! மூடநம்பிக்கை! முழு அடிமை! இவ்வாறு அந்த அம்மையாரை விழுந்து விழுந்து வணங்குவதற்குப் பணமும், பதவியும் பகட்டும் தவிர வேறு காரணங்கள் என்ன இருக்க முடியும்?

இந்நாட்டிற்கும், இங்குள்ள மக்களுக்குமாகவே, தம் வாழ்நாள் முழுவதும் தொண்டுகள் செய்தும், பற்பல ஈகங்கள் (தியாகங்கள்) செய்தும், இன்னல்கள் பட்டும், உடல் நலிவுடனும் நோயுடனும், பல்வேறு காரணங்களுக்காகச் சிறைப்பட்டும், கழி இளமை முதல் கண் மங்கிய முதுமைக்கால முடிவு வரைச் சிந்தித்தும், தொடர்ந்து செயலாற்றியும், போந்த தந்தை பெரியார், கடமை வீரர் காமராசர், பேரறிஞர் இராசாசி, பேரறிஞர் அண்ணா, இந்திய விடுதலைக்கு அரும்பாடுபட்ட காந்தியடிகள், தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவே இறுதி மூச்சு உள்ளவரை உழைத்த பெரும் பேரறிஞர் அண்ணல் அம்பேத்கர், மராட்டியப் பெரும் பிறவியர் பூலே, மலையாளப் பெரியார் நாராயண குரு முதலிய அருமபெருந் தலைமைத் தொண்டர்களின் அளப்பரிய உழைப்பெங்கே! கவர்ச்சியாலும், கரவாலும் எதிரணிகளின் மெலிவாலும், ஏழையர்தம் சிந்தனை நலிவாலும் இராசீவின் கொலை மறைவின் இரக்கத்தாலும், தேர்தல் சூதாட்டத்தில் பணப் பகடையாடி வெற்றி வாய்ப்புப் பெற்ற செல்வி செயலலிதாவின் ஆரவார, ஆடம்பர, ஆர்ப்பாட்ட அரசியல் விளையாட்டு எங்கே! எண்ணிப் பார்க்கவும் மனம் கூசுகிறது.

மேலே கூறிய வரலாற்று மேதையர்களுக்கும் கூட இத்துணையளவு புகழ்ச்சியுரைகள் கிடைத்ததில்லையே! மாறாக இகழ்ச்சியுரைகளும் இழிவு நிலைகளையுமன்றோ அவர்கள் வெகுமதிகளாகப் பெற்றனர்.

செல்வி செயலலிதா தலைமைப் பொறுப்பேற்று ஆளப் போகின்ற ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தில், இருபதில் ஒரு பங்குக் காலத்திற்குள் என்ன சீர்திருத்தம் செய்து விட முடியும்? இவர் இதற்குள் என்ன ஈகம் (தியாகம்) செய்து விட்டார்? என்னென்ன அருஞ்செயல்களை ஆற்றி முடித்துள்ளார்? என்பதையெல்லாம் கொஞ்சங்கூட எண்ணிப் பாராமல், இவ்வாறான புகழ் உளறல்களை வாரிவாரி, பொறுப்பற்ற கருத்துகளைப் பேசிச் செயற்பாடுகளைத் தெரிவு செய்ய வேண்டிய மதிப்பு மிகுந்த சட்டப் பேரவையுள் அமர்ந்து கொண்டு, துக்காணிக் காசுக்கு முக்காலும் முழுதும், கக்கிரி, பிக்கிரியென்று கெக்கலி கொட்டிப் பாடியிருக்கும் இச் சட்டமன்ற உறுப்பினர்களை நொந்து கொள்வதா? அல்லது இவர்கள் எங்கே போகிறார்கள், என்ன செய்யவுள்ளார்கள், எதற்காக உழைக்கிறார்கள் என்றெல்லாம் எண்ணிப் பார்க்கவும் இயலாதவாறு, அடிமைப்பட்டும் மிடிமைப்பட்டும், அறியாமைப் பட்டும் அன்றாடம் கஞ்சிக்கே ஆலாய்ப் பறக்கின்ற எம் ஏழைத் தமிழ் மக்கள் தங்கள் கைகளில் தரப்பெற்ற அவர்தம் வாழ்வியலை உறுதி செய்யும் ஒப்போலைச் சீட்டுகளைத் திரைப்படச் சீட்டுகள் என்றெண்ணி வாரிக் குவித்து, இத்தகையிலாளர்கள் சட்டமன்றத்திற்குள் நுழைவதற்கு, அடைத்த நெடுங்கதவுகளைத் திறந்து விட்டார்களே, அவர்களை நொந்து கொள்வதா? அல்லது இவ்விழிநிலை வரலாற்றை வரைந்து கொண்டிருக்கிற இக்காலத்தை நொந்து கொள்வதா? யாரை நொந்து கொள்வது? இப்படியொரு சூழ்நிலை நமக்கும் வந்துற்றதே என்று மனங்குமுறி அழ வேண்டியவர்களாகத்தாம் நாம் இருக்கிறோம். அதற்காக நாமே இரக்கப்பட்டுக் கொள்ள வேண்டியதுதான்!

இனி, அவ்வரசியல் பூசாரிகளின் உளறல்களைக் கீழே படியுங்கள்! படித்துவிட்டு, நாம், இங்குக் கூறியுள்ளவை பொய்யா மெய்யா என்பதை நீங்களே எண்ணி முடிவு செய்து கொள்ளுங்கள்)

- 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை குறிஞ்சி மலர் பூக்கும். அது இப்போது புனித ஜார்ஜ் கோட்டையில் பூத்து இருக்கிறது.
  (ச.ம.உ) —என் எஸ். பழனிச்சாமி
  (உழவர் உழைப்பாளர் கட்சி)

- தமிழ்நாட்டின் இருள் அகற்றிப் புதிய ஒளி மிகுந்த ஆட்சி நடத்துகிறார் புரட்சித் தலைவி. அமைச்சர். கண்ணப்பன்.

- கொடுமைகளைக் களைந்து, கொடியவர்களை ஒழித்து வெற்றி நடை போடுகிறார் புரட்சித் தலைவி.
  அமைச்சர் ஆர்.எம். வீரப்பன்;

Scanned with CamScanner

o 'பெண் பாவம் பொல்லாதது' என்று தமிழில் பழமொழி உண்டு. நமது முதல் அமைச்சருக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடுமைகளுக்காக மக்கள் அளித்த தீர்ப்புதான் இந்த அரசு பெற்ற மகத்தான வெற்றி.

ச.ம.உ. தஞ்சை **இராமசாமி** (இ. காங்.)

o தேர்தலில் இமாலய வெற்றி பெற்று முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ள புரட்சித் தலைவியை ஆயிரம் கொம்பன்கள் வந்தாலும் அசைக்க முடியாது.

ச.ம.உ. —**கலைச்செல்வி**, காட்பாடி. (அ.தி.மு.க.)

o புரட்சித் தலைவி மக்களைச் சந்திப்பதற்கோ தேர்தலைச் சந்திப்பதற்கோ எந்தக் காலத்திலும் தயங்கியதில்லை.

—அமைச்சர் **அழகு திருநாவுக்கரசு**

o புரட்சித் தலைவியின் ஆட்சி தமிழகத்தின் பொற்கால ஆட்சியாக விளங்குகிறது.

ச.ம.உ. **அபுல்ஹசன்** (இ.கா.)

o எலி எனப் புரட்சித் தலைவியை இகழ்ந்தனர். நீங்கள் அஞ்சவில்லை. புலியெனப் புறப்பட்டு வந்ததைப் பார்த்துப் புல்லர்கள் புறமுதுகிட்டு ஓடிவிட்டனர்.

இந்த நிலையை நீங்கள் பெறுவதற்கு நீந்தி வந்த நெருப்பாறுகள் எத்தனை? தாண்டி வந்த எரிமலைகள் எத்தனை? — என்று எண்ணிப் பார்க்கிறோம். புரட்சித் தலைவியைப் பராசக்தியின் மறுவடிவமாகவே மக்கள் பார்க்கிறார்கள்.

—அரசு கொறடா. **கா.ப. பட்டாபிராமன்** (அ.தி.மு.க.)

o தமிழகத்தின் காவல் தெய்வமான புரட்சித் தலைவி சட்டசபையில் பராசக்தியாக விளங்கி வருகிறார்.

ச.ம.உ. பூந்தமல்லி **டி. சுதர்சனம்** (இ.கா.)

o தமிழ்நாட்டின் காவல் தெய்வமாக - நடமாடும் ஆதிபராசக்தியாகப் புரட்சித் தலைவி விளங்கி வருகிறார். கடவுளை நாம் நேரடியாகப் பார்த்தது கிடையாது. எங்களைப் பொறுத்தவரை புரட்சித் தலைவியைத்தான் தெய்வமாக நினைக்கிறோம்.

ச.ம.உ. முசிறி. **பிரின்ஸ் தங்கவேலு** (அ.தி.மு.க.)

o கண்ணனின் அவதாரமாக உருவெடுத்து, தி.மு.க.வின் அராஜக ஆட்சியை அகற்றித் தமிழகத்தின் தர்மத்தை நிலை நாட்டிய தலைவி புரட்சித் தலைவி.

தமிழக மக்களின் வீடுகளில் விளக்குகளை ஏற்றி வைத்துள்ள புரட்சித் தலைவி கோவில்களிலும் விளக்குகளை ஏற்றி வைப்பார். ச.ம.உ. கும்பகோணம்

இராம. இராமநாதன் (அ.தி.மு.க.)

o புரட்சித் தலைவி நீடுழி வாழ வேண்டும் என்பதற்காக எனது தாயார், வீட்டில் அணையா தீபம் ஏற்றி வருகிறார்.

புரட்சித் தலைவி, ஈகையில் புரட்சித் தலைவர்; அறிவாற்றலில் ராஜாஜி; சட்டென்று பதில் அளிப்பதில் அண்ணா; மூட நம்பிக்கையை அகற்றுவதில் பெரியார்; தன்னலமற்ற எண்ணத்தில் காமராஜர்; துணிச்சலுடன் நடந்து கொள்வதில் அன்னை இந்திராகாந்தி; ஆகமொத்தத்தில் தெய்வப் பிறவியாக அவர் இயங்கி வருகிறார்.

ச.ம.உ. புதுநயினார் **ஆதித்தன்** (அதிமுக.)

o அமைச்சர் பணியைச் செவ்வனே ஆற்றிட, எனக்கு ஆசானாக இருந்து, அறிவுரை கூறி, எனது பணி சிறக்க ஆலோசனை கூறிவரும் புரட்சித்தலைவியை வணங்குகிறேன். நிச்சயமாக புரட்சித்தலைவி ஆட்சியில் தமிழகம் தலைநிமிர்ந்து நிற்கும்.

அமைச்சர் **கண்ணப்பன்**

o முதலமைச்சர் புரட்சித் தலைவி, இந்தியாவிலேயே தொழில் துறையில் தமிழகத்தை முதல் இடமாக ஆக்க சபதம் எடுத்துள்ளார். அமைச்சர் **அரங்கநாயகம்**

(குரும்பபாளையத்தில் ஒரு விழாவில் 29-9)

o விடுதலைப் புலிகளையே விரட்டி அடிக்கும் எங்கள் வீராங்கனை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில், சந்தன மரக் கடத்தல் வீரப்பனை பிடிப்பது கடினமானதில்லை. அமைச்சர் **ஜெயக்குமார்**

o வேளாண்மைத் துறைக்கு நவரத்தின திட்டங்களைப் புரட்சித் தலைவி அறிவித்துள்ளார். அமைச்சர் **கு. பா. கிருஷ்ணன்**

o மீனவர் நலத்திற்கு மைய அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இது நமது பெருமதிப்பிற்கும் மரியாதைக்கும் பாத்திரமான இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களின் சாதனையாகும்.

அமைச்சர் **ஜெயக்குமார்**

o இதயத்தின் அடித்தளத்திலிருந்து கூறுகிறேன். எல்லாப் புகழும் புரட்சித் தலைவிக்கே! ச.ம.உ. **லாரன்ஸ்** (அ.தி.மு.க.)

o விடுதலைப் புலிகளை அடக்கி ஒடுக்கியதற்காக மாண்புமிகு முதல் அமைச்சர் ஜெயலலிதாவிற்கு 'டாக்டர்' பட்டம் வழங்கிக் கவுரவிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

ச.ம.உ. **எஸ். ஆர். ஜெயராமன்** (இ.காங்.)

Scanned with CamScanner

o புரட்சித்தலைவி பலமுறை தமிழ் நாட்டைச் சுற்றிச் சுற்றி வந்திருக்கிறார்......இந்த அளவிற்குச் சுற்றுப் பயணம் செய்த தலைவர்கள் வேறுயாரும் இருக்கமுடியாது.
அமைச்சர் **கண்ணப்பன்**

o நாங்கள் குங்குமம் சுமக்கும் கழுதையல்ல. கோட்டை அரணுகை—ஏ.கே. 47 துப்பாக்கி ஏந்திய சிங்கங்களாக இருப்போம்.
ச.ம.உ. திருவிடை மருதூர் **பன்னீர்ச் செல்வம்**

o எந்த முதலமைச்சரும் எண்ணிப்பார்க்காத அளவுக்கு 'டாக்டர்'களின் வசதிகள் பற்றிப் புரட்சித் தலைவி எண்ணிப்பார்க்கிறார்.
அமைச்சர் **முத்துசாமி**

o பர்கூரில் மாதிரிக் குடியிருப்பு அமைக்கப் பட உள்ளது. இந்தியாவிலேயே முதன் முதலாக, சாதி சமய வேறுபாடற்ற கிராமிய மாதிரிக்குடியிருப்புத் திட்டத்துக் கான கருத்தை வழங்கியவர் முதல் அமைச்சர்தான். எனவே, இந்தக் குடி யிருப்புக்குப் 'புரட்சித்தலைவி செயலலிதா நகர்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

ஆதி திராவிட மக்களை ஓர் இடத்தில் ஒதுக்கி வைப்பதை மாற்றி, அனைவரையும் ஒரே இடத்தில் வைக்கின்ற முயற்சியில் வெற்றிபெற்றிருப்பது தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி மட்டுந்தான்!
அமைச்சர் **அழகு திருநாவுக்கரசு**

o புரட்சித் தலைவிக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டு விட்டால், தமிழகத்தில் இரண்டாவதாகப் பெரிய கறை படிந்துவடும். எனவே, கோடிக்கணக்கான உருபா செலவழித்தாலும் பரவாயில்லை. போலீஸ் துறையை நவீனப்படுத்த வேண்டும்.
ச.ம.உ. **செ. கு. தமிழரசன்** (குடியரசுக் கட்சி)

o புரட்சித்தலைவி அவர்கள் வேளாண்மைத் துறையில் பெண்களுக்கோர் புரட்சி படைத்திருக்கிறார்.
அமைச்சர் கு. ப. கிருஷ்ணன்

o விடுதலைப் புலிகளை ஒடுக்குவதில் முதல் அமைச்சர் பாயும் புலியாகச் செயல்படு கிறார். அவர் மரண சாசனத்தில் கையெழுத்திட்டுக் கிளம்பி இருக்கிறார்.
ச ம.உ. **ஞானசேகரன்** (இ காங்.)

o புரட்சித் தலைவியின் ஆணையை ஏற்று, சட்ட மன்ற உறுப்பினர்கள் நூறுசதவிதம் யாரும் (மது) குடிப்பதில்லை. அதன் வாசனையைக் கூட நாங்கள் அறியவில்லை.
ச.ம.உ. **சிங்காரம்** (இ. காங்)

o தன்னுடைய ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்பதற்காக, விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகக் கருணாநிதி செயல்பட்டார். அன்றைய தினம் அவர் ஆட்சி நடத்தவில்லை. விடுதலைப்புலிகள் தான் நாட்டை ஆண்டார்கள்.
ச.ம.உ. **எம். ஜி. சேகர்** (அ.தி.மு.க.)

o அமைதிப் பூங்காவாக இருந்த தமிழகம் கடந்த இரண்டு ஆண்டுகளில் அமைதியிழந்து காணப்பட்டது. நமது இதய தெய்வம் அவர்கள் தமிழக முதலமைச்சர் பொறுப்பை ஏற்றபின் தமிழகம் மீண்டும் அமைதிப் பூங்காவாக மாறி இருக்கிறது.
அமைச்சர் **செங்கோட்டையன்**

o முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி, இன்றைய தினம் 'திராவிட மறுமலர்ச்சி மாமன்றம்' என்ற ஓர் அறக்கட்டளையை உளநோக்கத்துடன், நாட்டில் வன்முறையைத் தூண்டிவிட்டுப் புரட்சித்தலைவியைக் கவிழ்த்துவிடலாம் என்ற அடிப்படையில், தொடங்கி உள்ளார்.

இந்த மாமன்றத்தின் அஞ்சல் வழிக் கல்வி மூலம் ஜாதிக் கலவரத்தைத் தூண்டி நாட்டை வன்முறைக் காடாக்க நினைத்துள்ளார். இதை அரசு கவனத்தில் கொண்டு, தி மு.க.வைத் தடைசெய்ய வேண்டும்; நாட்டைப் பிளவு படுத்த திட்டமிட்டிருக்கும் அவரைக் கைது செய்தாலும் தவறில்லை.
ச.ம.உ. **க. அர்ச்சுணன்** (அ.தி.மு.க.)

o தமிழகத்தில் தொழில் வளர்ச்சியைப் பெருக்க நினைக்கும் புரட்சித் தலைவியின் ஆட்சி இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேல் இருக்கும் என்று தொழில் துறையில் உள்ளவர்கள் புரிந்து வைத்துள்ளனர்.
ச.ம.உ. **லாரன்சு** (அ.தி.மு,க.)

o தஞ்சையை 'நஞ்சை கொஞ்சி விளையாகும் மாவட்டம்' என்று சொல்வார்கள். தி.மு.க. ஆட்சியில் தஞ்சை கெஞ்சிக் கொண்டுதான் இருந்தது. புரட்சித் தலைவி ஆட்சி வந்தபின்தான் தஞ்சையில் நஞ்சை கொஞ்சி விளையாடுகிறது.
ச.ம.உ. **அபுல்ஹசன்** (இ. காங்.)

o எதிர் காலத்தில் புரட்சித்தலைவி, சுண்டு விரல் காட்டுபவர்தான் சட்டசபைக்கு வரமுடியும். இக்கட்சி தேசியக் கட்சியாக விளங்க வேண்டும்—என்பதற்காகத் தான் அ.இ.அ தி.மு.க. என்று புரட்சித்தலைவர் பெயர் சூட்டினார். அந்த ஒப்பற்ற தலைவரின் ஆசையைத் தெய்வப்பிறவியாக விளங்கும் புரட்சித் தலைவி நிறைவேற்றும் வகையில், இந்தியா முழுவதும் அமைப்பை ஏற்படுத்த வேண்டும். அப்படி அமைத்

தால் அடுத்தமுறை நிச்சயமாகப்புரட்சித் தலைவி பிரதமர் ஆகிவிடுவார்.

ச.ம.உ. புதுநயினார் ஆதித்தன் (அ.தி.மு.க.)

o நல்லவனாக இருப்பதை விட விசுவாசியாக இரு' என்று புரட்சித் தலைவர் கூறுவார். அதைப்போல நான் என்றும் புரட்சித் தலைவிக்கு விசுவாசியாக இருப்பேன்.

ச.ம.உ. மாணிக்கவாசகம் (அ.தி.மு.க)

o தமிழ்நாட்டில் தெய்வ வழிபாடு குறைந்ததால்தான் தேசபக்தி குறைந்துள்ளது. இந்து மதம் சற்று அழிந்து கொண்டு இருந்த நேரத்தில், முதலமைச்சராகப் புரட்சித் தலைவி பொறுப்பேற்று இருக்கிறார். இதனால் மீண்டும் சோழர் காலம் உருவாகும் என மக்கள் உறுதியாக நம்புகிறார்கள்.

காஞ்சி மடாதிபதி பிறந்த காஞ்சிபுரத்தை இந்து மதத்தின் புனித நகரமாக அறிவிக்க வேண்டும். ஜெயேந்திர சரசுவதி தலைமையில் ஒரு வாரியத்தை அமைத்து உலகம் முழுவதும் இந்து மதத்தைப் பரப்ப வேண்டும்.

குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்கிறவர்கள் உங்களைப் 'பாப்பாத்தி' என்கிறார்கள். நீங்கள் அழகாகப் பதில் சொன்னீர்கள். ஆண்டவனுக்குச் சேவை செய்யும் ஜாதியை அழிக்க முடியாது. உங்களை அசைக்க எந்தக் கொம்பனாலும் முடியாது. ஏழை எளிய கடவுள் பக்தியுள்ள மக்கள் உங்கள் பின்னால் நிற்கிறார்கள். ஆண்டவன் வடிவில் உங்களை மக்கள் பார்க்கிறார்கள்.

ச.ம.உ. போளூர் வரதன் (இ.காங்.)

o மின்சாரம் பற்றி அறிந்தவரே மின்சார வாரியத்தின் உயர் அதிகாரியாக நியமிக்கப்படுவதுபோல், மருத்துவ விஷயங்கள் அறிந்தவரையே மருத்துவத்துறையாக நியமிக்கும்போது, ஹிந்து சாஸ்திர சம்பிரதாயங்களை நன்கு அறிந்தவர்களை ஹிந்து ஆலயங்களில் நிர்வாக அலுவலர்களாக நியமிக்க வேண்டும்... ஹிந்து நீதி, தத்துவங்களைப் பரப்புவதற்காக காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திரர் தலைமையில் வாரியம் அமைக்கப் படவேண்டும்.

ச.ம.உ. போளூர் வரதன் (இ.காங்.)

o 'அம்மா என்றால் அன்பு; அப்பா என்றால் அறிவு; ஆசான் என்றால் கல்வி'—என்ற உயர்ந்த தத்துவத்தின் அடிப்படையில், எங்களின் மீது அன்பையும், எங்களுக்கு அறிவையும், எங்களுக்கு அரசியல் கல்வியையும் பயிற்றுவித்த அம்மாவும், அப்பாவும், ஆசானும் புரட்சித் தலைவியே!

எங்களின் உள்ளங்களில் இயக்கு சக்தியாக இருந்து, எங்களை இயக்கிக் கொண்டிருக்கும் இதய தெய்வமே! நாங்களெல்லாம் நிலத்திலே தெய்வமாக வணங்கிக் கொண்டிருக்கும் நடமாடும் தெய்வம் நீங்களே!

கொடியவர்களின் கூடாரமாக, முரடர்களின் மடமாக, சட்டத்தை மீறிச் செயல்புரிகின்றவர்களின் உறைவிடமாக இருந்த தமிழகத்தைப் புனித பூமியாக மாற்ற வேண்டுமென சபதம் பூண்டு, புனிதமாக்கினார் புரட்சித் தலைவி.

கண்ணகியின் கோபத்திற்கு ஆளான மதுரை மாநகரில் மிஞ்சும் இடமாகச் சிறிது இருந்தது என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுவர். ஆனால், இங்கு கொடியவர்கள் அப்புறப்படுத்தப் பட்டனர். கொள்கை வீரர்கள், வீராங்கனைகள் களத்தில் வெற்றி கண்டு, புரட்சித் தலைவியின் கொள்கை முரசினை அறைகின்ற பேரிகைகளாக, முரசுகளாக இங்கே வீற்றிருக்கும் காட்சி என்னைச் சிலப்பதிகார காலத்திற்கே அழைத்துச் செல்கிறது.

என் போன்ற ஏழை, எளிய, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே பிறந்து உழல்கின்ற குடும்பத்தைச் சார்ந்தவர்கள் கூட, இந்த மாமன்றத்தில் - வரலாறு படைத்த இந்த சட்டமன்றத்தில், உரையாற்றுகின்ற பேறு பெற்றோம் என்றால், அந்தச் சிறப்பு, பெருமை, அத்தனையும் புரட்சித்தலைவி அவர்களின் இதயத்தில் வீற்றிருக்கும் அன்பு, கருணை, தயை, பொங்கும் உள்ளார்ந்த மனித நேயத்திற்கு மட்டுமே சொந்தம்.

கருணை காட்டுவது மனித இயல்பு; அன்பு காட்டுங்கள் என்று ஏங்குகின்ற பிற்பட்ட சமுதாயத்திற்கு அன்பினை அருவியாக, பேரருவியாக விழச்செய்து புதுமை படைத்தவர் நமது புரட்சித்தலைவி அவர்கள்.

எளியவர் முதல் உயர்ந்தவர் வரை, படித்தவர் முதல் பாமரர் வரை, வாழ்வில் வளம்பெற, நீதி, நேர்மை, நியாயம் என்னும் தீபத்தினைக் கையில் ஏந்தி, தமிழக மக்களின் ஒப்பற்ற தலைவியாக, தனது வாழ்க்கையினையே தமிழ் நாட்டிற்காகவும், தமிழ் மக்களுக்காகவும், தன்னைத் தேய்த்து மணம் தரும் சந்தனமாக விளங்குகிறார், மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள்.

எனவே தங்களின் பொற்பாதங்களைச் சிரம் தாழ்த்தி வணங்கி, இந்த மாமன்றத்தில் என் உரையைத் தொடங்குகிறேன்.

Scanned with CamScanner

செத்துப் போன நொண்டிக் குதிரை!

தஞ்சை நலங்கிள்ளி, அமெரிக்கா.

சில ஆண்டுகளுக்கு முன்னால் தமிழகத்துக்கு வந்திருந்த, முன்னாள் இந்தியத் தலைமையமைச்சர் மொரார்சி தேசாய் '**இந்தி எதிர்ப்பு** என்றநொண்**டிக் குதிரை செத்துப் போய்விட்டது**'' என்று கிண்டலாகப் பேசிச்சென்றார். அந்த நொண்டிக் குதிரை செத்துப்போனதைப் பற்றித் தமிழர்கள் கண்ணீர் விட வேண்டியதில்லை. ஏனென்றால், இந்தி எதிர்ப்புப் போராட்டங்களால் தமிழருக்கு நிலைப்படியான நலமேதும் விளையவில்லை—விளையவும் செய்யாது.

கடந்த ஐம்பதாண்டுக் காலமாக நாம் இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் நடத்தினோமே, என்ன பயன் விளைந்தது? நமது இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் உச்ச கட்டம் எய்துங்கால், வட இந்திய அரசு ''இந்தி திணிக்கப்பட மாட்டாது'' என்று உறுதி மொழி சொல்லும். ஆனால் அந்த உறுதி மொழிகள் வெறும் செல்லாக் காசு; வெற்றுப் பேச்சு.

பொதுவாக, வட இந்திய அரசு இந்தித் திணிப்பு முயற்சியில் நாலடி முன் வைக்க, நாம் அதை எதிர்த்தால் ஓரடி பின்வாங்கும். அடுத்த ஆண்டு மேலும் நாலடி முன் வைக்கும். நாம் எதிர்த்தால் ஓரடி பின் வாங்கும். இப்படியாக நாளுக்குநாள், மேலும் மேலும் இந்தி திணிக்கப்படுவதை நடுநிலையாளர் நன்கறிவர்.

1965-இல் தமிழகமே ஒட்டு மொத்தமாக இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராடியது. ஐந்நூற்றுக்கு மேலான தமிழர்களை வட இந்தியக் காவற்படைகளும், வட இந்தியருக்கு அடிவருடி நின்ற தமிழ்க் காவல் துறையினர் சிலரும் சுட்டுக் கொன்றனர். விளைந்த பயன் என்ன? அன்றைக்கு 1965-இல், தில்லியரசிலும், வைப்பகங்கள் (banks), தொழிற்சாலைகள், வானூர்தித் துறை, தொடர்வண்டித் துறை மற்றும் தொலை ஒளி, வானொலி ஆகியவற்றிலும் இந்தி எவ்வளவுக்குப் பயன்படுத்தப்பட்டது? இன்று-26 ஆண்டுகளுக்குப் பின்னால்—அன்றைய நிலையை விட மிகப் பெருமளவில் இந்தி பயன்படுத்தப்படுகிறதே? இந்தி திணிப்புக்காக வட இந்திய அரசு, தமிழரின் வரிப் பணத்தில் எத்தனைக் கோடி உருபா செலவிட்டுள்ளது? அந்த பலகோடி உருபாக்களைத் தமிழகத்தில், தமிழரின் வாழ்க்கை நலனுக்காகப் பயன்படுத்தியிருந்தால் எத்தனை மருத்துவ மனைகள் கட்டியிருக்க முடியும்? எத்தனைச் சாலைகள் போட்டிருக்க முடியும்? எத்தனை நீர்ப்பாசனங்கள் கட்டியிருக்கமுடியும்?எத்தனைத் தொழிற்பள்ளிகள் நிறுவியிருக்க முடியும்? எத்தனைத் தொழிற்சாலைகள் அமைந்திருக்க முடியும்? எத்தனைத் தமிழருக்கு வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தியிருக்க முடியும்?

அந்தோ! தமிழரின் வரிப் பணங்கள் கோடிக்கணக்காக இந்தி வளர்ச்சிக்காகவும், இந்தி திணிப்புக்காகவும், இந்தி பேசும் மாநிலங்களான உத்தரப் பிரதேய, மத்தியப் பிரதேய, மக்களின் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கவும் பயன்படுத்தப்படுகின்றனவே! இந்தக் கொடுமை என்று முடியும்? தமிழரின் வரிப்பணமனைத்தும் தமிழரின் நலனுக்காகவே பயன்படுத்தப்படும் நன்னாள் என்று மலரும்?

இந்தியாவின் ஒரு மாநிலமாகத் தமிழகம் இருக்கும் வரையிலும், தமிழரின் வரிப்பணங்கள் கோடிக் கோடியாக வடக்கே எடுத்து செல்லப் பட்டு, அவை மத்தியப் பிரதேய, உத்தரப் பிரதேய மக்களின் நலனுக்காக செலவிடப்படும் கொடுமை தொடரத்தான் செய்யும். அதனால், தமிழரின் நலனில் அக்கறையுள்ளோர் அனைவரும் — அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்திருந்தாலும் சரி—தமிழக விடுதலைப் போரில் ஈடுபடுவார்களாக!

செத்துப் போன இந்தியெதிர்ப்பு என்ற நொண்டிக் குதிரைக்கு மாறாக, இளங் குதிரைக் குட்டியொன்று தமிழ் மண்ணிலே தளிர் நடை போடுகிறதின்று. **தமிழக விடுதலை உணர்வு** என்ற குதிரைக் குட்டி அது! இன்னும் அது சின்னக் குட்டியாகவே இருக்கிறது. ஆனால் **பெருஞ்சித்திரனார்** போன்றோர் ஊட்டும் உண(ர்)வாலும், தமிழரசன் அனையோர் தந்த - தருகின்ற போராட்டப் பயிற்சியாலும், இந்த குட்டிக் குதிரை போர்க் குதிரையாக வளர்ந்தேறுகிறது. விரைவிலேயே, தன் பிடரி மயிர் சிலிர்க்க, மூக்குத் தொளையினின்று கனல் மூச்சு வெளியேற அந்தப் போர்க்குதிரை **களம் பல கண்டு, பகைவரை வென்று** தமிழகத்தை விடுவிககததான் போகிறது!

''செந்தமிழைச் செந்தமிழர் நாட்டைச் சிறை மீட்க
நந்தமிழர் உள்ளத்தே வையம் நடுநடுங்கும்
வெந்தணல் ஒன்று விரைந்து வளர்ந்ததென்று
குந்திக் குரலெடுத்துக் கூவாய் கருங்குயிலே!''

—பாவேந்தர்

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின்

ஓ ஓ தமிழர்களே!

அரிய சிறப்புச் சொற்பொழிவு நூல்!
வெள்ளைத்தாள் பதிப்பு : 9-00
செய்தியச்சுத்தாள் பதிப்பு : 6-50
இஃது ஒரு புதிய வெளியீடு.
பதிவுக்கொடுப்பு அஞ்சல் செலவு : 3-00
தென்மொழி, சென்னை-5

Scanned with CamScanner

(இதழ் 147-இன் தொடர்ச்சி)

திராவிட முன்னேற்றக் கழகத்தின் வீழ்ச்சியும்! தமிழினத்தின் எழுச்சியும்!

கரடிப்பட்டி - கண்ணன், அறி. இ.

அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் :

இயக்கத்தின் தலைப்பே பல்வேறு முரண்பாடுகளைக் கொண்டது என்பதை அரசியலில் முதல் வகுப்பு படிப்போர்கூட புரிந்து கொள்வர். தி.மு.க.வின் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் வளர்ந்த தரகு முதலாளிகளாலும், தி.மு.க.வை உடைத்து வலிவிழக்கச் செய்யும் இந்தியப்-பார்ப்பனிய அரசின் சூழ்ச்சிகளாலும் மறைந்த ம. கோ. இராமச்சந்திரன் தலைமையில் அ.இ.அ.தி.மு.க. தோற்றுவிக்கப் பட்டது. தி.மு.க.வின் ஆட்சிக் காலத்தில் அடித்தளத்திலுள்ள உழைக்கும் மக்களின் தேவைகள் நிறைவேற்றப் படாததாலும், அரசியல் உணர்வை மழுங்கடித்துத் திரைப் படக் கவர்ச்சியை முதன்மைப்படுத்தியதாலும் ம. கோ. இராமச்சந்திரன் தங்கள் தேவைகளை நிறைவேற்றுவார் என்று மக்கள் நம்பி 1977-ஆம் ஆண்டு முதல் அ.இ.அ.தி.மு.க.வை ஆட்சியில் அமர்த்தினர்.

அவரும் தம்முடைய திரைப்படக் கவர்ச்சியாலும், இலவயத் திட்டங்களாலும் வட இந்திய அரசின் ஒத்துழைப்பாலும் தம் இறுதிக் காலம் வரை மக்களை ஏமாற்றிக் கொண்டிருந்தார். ம. கோ. இரா. காலத்திலேயே தம்மோடு நடித்த செயலலிதாவைக் கட்சியில் கொள்கைப் பரப்புச் செயலாளராக அமர்த்தி வளர்த்து விட்டதின் மூலமும், தமிழீழ விடுதலைப் புலிகளைக் காரணங்காட்டி இனவுணர்வும் அரசியல் வரலாற்று அறிவும் இல்லாத தமிழர்களை ஏமாற்றியும், இராசீவ் காந்தியின் படுகொலைக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தைக் காரணம் காட்டியும் அ.தி.மு.க. தமிழக ஆட்சியைப் பிடித்துள்ளது. தரகு முதலாளியியத்திற்கே உரிய தன்மையைப்போல் ஒரு சிற்றெறும்பின் போர்க்குணம் கூட அற்ற நிலையில் தி.மு.க. தலைமை தன்னுடைய தோல்வியை தானே தேடிக்கொண்டது. தமிழ்த் தேசிய இன உணர்வை அடித்தள மக்களுக்குச் சரியான வழியில் கொண்டு செல்லாததாலும், வட இந்தியத்தரகு முதலாளியத்தோடு அடிக்கடி உடன்பாடு செய்துகொண்டு, மக்களின் அன்றாடத் தேவைகள் நிறைவேற்றப்படாததாலும் கட்சிக்குள் ஒரு சிலர் மட்டுமே ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்ததாலும், எதிர்ப்புணர்வின் காரணமாகவே தி.மு.க.வை மக்கள் தேர்தலில் தோற்கடித்தனர். தி.மு.க.வின் வழியிலேயே அ.தி.மு.க.வும் விரைந்து சென்று தன் அழிவைத் தேடிக் கொள்ளும்.

தமிழினத்தின் எழுச்சி : பண்டைத் தமிழினத்தின வரலாற்று வீழ்ச்சியிலிருந்தும், அண்மைக்காழத் தேர்தல் - அரசியல் நாடகங்களிலிருந்தும் தமிழ்த்தேசிய இன உணர்வாளர்கள் பாடங்கற்றுக்கொள்ள வேண்டும். தமிழினத்தின் அக எழுச்சிக்கு முதற்படியாகவுள்ள குமுக உறவுகளின் பல்வேறு கூறுகளான மொழி, கலை, பண்பாடு, நாகரீகம் போன்றவற்றின் தனித்தன்மைகளை வெளிக் கொணர்வதிலும், புற எழுச்சிக்கு உதவுகின்ற - அலலது வேகப்படுத்துகின்ற அரசியல், பொருளியலில் அறிவியல் சிந்தனைகளை மக்களிடம் கொண்டு செல்வதிலும் நாம் இடைவிடாது உழைக்க வேண்டும். தேர்தல் நாடகக் காட்சிகளிலேயே மக்கள் மயங்கிவிடாமல் இருப்பதற்கு, ஓர் இன எழுச்சிக் காட்சியை நாம் நம் மக்களுக்குக் காட்டவேண்டும். தமிழீழப் போராளிகளின் விடுதலைக் குரலும் மக்களின் துயரக் குரலும் தமிழகத்தில் ஒருசிலரையே விழிக்கச் செய்துள்ளது. விழித்தவர்களே மற்றவர்களை விழிப்படையச் செய்வதற்கும் தமிழ் தேசிய இன எழுச்சியைச் சரியான திசையில் கொண்டு செல்வதற்கும் முயலவேண்டும். செயற்கையான இந்திய தேசிய உணர்வும், திராவிட தேசிய உணர்வும் மறைக! இயல்பான உண்மையான தமிழ்த் தேசிய இன உணர்வு வளர்க!!
வெல்க!!

போகிற போக்கில் ஒரு பார்வை-1

இன்றைய நிலையில் அரசுத் துறைகளில் பார்ப்பனா வல்லாளுமை எவ்வாறு உள்ளது என்பதைக் கீழ்க்காணும் பட்டியல் நன்கு உணர்த்தும்.

பணிவகை	துறை	பார்ப்பனர் பிறமேலாளுமையினர்	பிற்படுத்தப்பட்டவர்கள்
1. முதல் பிரிவு அதிகாரிகள் (Class I)	படைத்துறை	1322	9
	பொருள்துறை	941	;
2. பிறமொத்த இடங்கள்	படைத்துறை	9476	1
	பொருள்துறை	4054	327
	செய்தித்துறை	11498	25
			1347

இந்திய தேசிய நீரோட்டத்தில் தமிழ்நாடு இருக்கும் வரை இந்தித் திணிப்பு நிகழ்ந்தே ஆகும்!

—அதியமான்—

இந்திய அரசியல் சட்டத்தில் தேசிய மொழிகள் 15. இவற்றில் தமிழ் போன்று இந்தியும் ஒன்று. இவற்றில் இந்திக்கு மட்டும் தனிப்பாதுகாப்புக்கும், அதன் வளர்ச்சிக்கும் பணம் கணக்கின்றிச் செலவிடப்படுகிறது. இந்தியைத் திட்டப் பொருள்களில் ஒன்றாகச் சேர்த்து, இந்தியாவின் ஆட்சி மொழியாக அதனை வளர்த்தெடுத்துப் பிறமொழிகளை சிதைவுறச் செய்யும், கேடான செயலைக் கடந்த 40 ஆண்டுகளாக இந்திய அரசு செயல்படுத்திக் கொண்டு வருகிறது.

இந்திய அரசியல் சட்டம் 1950-இல் நடைமுறைக்கு வந்தது. அன்று முதல் இந்தியே இந்தியாவின் ஆட்சி மொழியென்று அனைத்து மாநிலங்களையும் இந்தியை ஏற்றுக்கொள்ள வற்புறுத்திக் கொண்டு வருகிறது. இன்னும் வரும். எக்காலம் வரை இங்கு இச்செயல் நிகழும் என்றால், இந்திய தேசீய நீரோட்டத்தில் தமிழ்நாடு இருக்கும் வரைக்கும் இந்தித் திணிப்பு நிகழ்ச்சி நடைபெற்றேயாகும். இதை எந்தக் கொம்பனாலும் தடுக்க முடியாது. ஏனென்றால், இந்தியாவிடுதலை பெறுவதற்கு 50 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, தந்தை பெரியார், மறைமலையடிகள், கா. அப்பாத்துரையார், திரு.வி.க , சோமசுந்தர பாரதியார் போன்றோர் இந்தியை எதிர்த்தார்கள். என்றாலும் தமிழ்நாட்டிற்குள் இந்தித் திணிப்பை நிறுத்தவில்லை. அறிஞர் அண்ணாவின் தலைமையிலான தி.மு.க. பேராயக் கட்சியின் இந்தி ஆளுமையை விரட்டிய பின்பும் இந்தித் திணிப்பு நிற்கவில்லை.

தமிழகத்தில் இந்தி எதிர்ப்பாளர்கள் இந்தி வரும் வழியை ஒரு பக்கம் அடைத்தாலும், மறு வழியாக அது முக்காட்டோடு வருகிறது. ஆகவே இந்தி வரவை நிறுத்துவது கானல்நீர்.

இந்தித் திணிப்பை எதிர்த்த தமிழிளைஞர் பலர் உயிரிழந்தும் தமிழகத்தில் இந்தியைப் புகுத்துவதை நிறுத்தவில்லை. இந்தி படித்தால் தான் வேலை என ஏமாற்றி கதைக்கின்றனர். இந்தி படித்து வயிற்றை வளர்த்தால் போதும் எனக் கற்போர் வேறு பெருகிக்கொண்டு வருகிறார்கள். இந்தியைப் பாடமாகக் கற்பிக்கும் ஆங்கிலப் பள்ளிகளையே இந்திய அரசு ஏற்புச் செய்து அவர்கள் அடிக்கும் கொள்ளைகளுக்கு உடந்தையாகவும் இருக்கிறது. ஏனெனில் இந்தி அப்பள்ளிகளில் வளர்க்கப்படுகிறது. இந்திப் பொத்தக எழுத்தாளர்களுக்குப் பல ஆயிரம் பணம் பரிசு. அவ்வகையில் இந்தியில் பொத்தகம் எழுதிய இலக்குமி நாராயணன் லால், பிமல் குமார் ரிவத் சவா ஆகியோருக்கு உரூபாய் 10 ஆயிரம் 8 ஆயிரம் என வழங்கி உள்ளது. (தினமலர் 1-4-90) இப்போது இந்தியைக் கல்லூரியில் புகுத்துவதற்கு நடுவண் அரசின் கடித எண் எஃப்: 1501/90 என். எசு 9 கல்வித்துறை நாள் 28-5-90இன் படி தமிழ் நாட்டரசு கல்லூரி கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் எண் ந.க. 04з812/த6/90 நாள் 8-6-90-இல் ஒரு சுற்றறிக்கையைக் கல்லூரிகளுக்கு அனுப்பி உள்ளது.

கல்லூரிகளில் இந்தியைப் பாடமாகப் படிப்பவர்களுக்கு 1990-இல் அரசு உதவித் தொகை வழங்குகிறது. இத்தொகை இந்தி பேசா மாநிலக் கல்லூரிகளுக்கு மட்டுமே வழங்க இருக்கிறது. நடப்பு ஆண்டில் இந்தியைப் பாடமாகவோ அல்லது விருப்புப் பாடமாகவோ தேர்ந்தெடுத்தவர்களுக்கு இவ்வுதவித்தொகை கிட்டுமென அறிவித்துள்ளது. இச்செயல் இந்தி பேசா மாநிலங்களில் இந்தியைத் திணிக்க எடுக்கும் முறையற்ற முயற்சி.

அறிஞர் அண்ணா தமிழக முதலமைச்சராக இருந்தபோது முன்னாளரசு கொணர்ந்த தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய மும்மொழித் திட்டத்தினை ஒழிக்க இந்தியைப் பாடத் திட்டத்தில் இருந்து நீக்கினார். அப்போது கல்வி மாநிலப் பட்டியலில் இருந்தமையால் மாநில அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தியை நீக்கி விட்டார். எனவே இந்தியைப் பாடத் திட்டத்தின் மூலம் திணிக்க முடியாத நிலை இருப்பதால், கல்லூரிகளில் விருப்பப் பாடமாக அல்லது ஒரு மொழிப் பாடமாகப் படிப்பவர்களுக்கு இந்திய அரசு உதவித் தொகை கொடுத்து மாணவர்களைப் படிக்கச் செய்து விடலாமென்று இந்த நரித் தந்திரத்தைச் செய்கிறது. உதவித் தொகைப் பணத்தைப் பெறுவதற்காகவாவது இந்தியைப் படிக்க வேண்டுமெனப் படிப்பர். அடுத்து இந்தியில் தேர்ச்சி பெற்றவர்க்கே நடுவணரசு வேலைகளில் முதலுரிமை எனக் கூறி இந்தியை எளிதாகப் புகுத்திவிட இந்திய அரசு திட்டமிட்டுச் செயல்படுகிறது. இதற்கு தமிழரசு உடந்தையாக இருக்கிறது. அதனாலேயே நடுவணரசின் இத்திட்டத்தை ஏற்றுத் தமிழக அரசுக் கல்லூரி இயக்குநர் கல்லூரிகளுக்கு இவ்வாணையை அனுப்பி இருக்-

Scanned with CamScanner

கிறார். இந்தியை மிக ஆழமாக எதிர்த்துச் சிறைசென்ற கலைஞரே அன்று தமிழக முதலமைச்சர். அவரது ஆட்சியில்தான் இப்படியோர் ஆணையைச் செயலாக்க தமிழக அரசு துணை நின்றது. சிரங்கு நோயாளிக்கு அது ஒழிய மருத்துவர் மருந்தின்மூலம் நலம் பெறச் செய்ய வேண்டும். அதுவன்றி நான் சொறிய சிரங்கு போகும் எனச் சொறிந்து சொறிந்து உறங்க வைத்துச் சிரங்கை ஒழிக்காமல் ஏமாற்றும் மருத்துவர் நிலையில் கலைஞர் அன்று இருந்தார். என்றும் இந்தியை எதிர்ப்போம் என்பதற்கு இந்தி வந்து கொண்டே இருந்தாலே முடியும். எனவே இந்தியின் புறவழி வருகையைத் தடுக்கவில்லை.

இந்தியின் தகுதி : இந்தி ஒரு செயற்கை அல்லது ஆக்க மொழி. இந்தியாவில் அரேபியராட்சியில் அவருருவாக்கிய உருது மொழியிலுள்ள அரேபியச் சொற்களை நீக்கி அவற்றுக்குப் பகரமாக (பதிலாக) சமற்கிருதச் சொற்களைப் பொருத்தி ஆக்கிய ஒரு செயற்கை மொழி என்பர் மொழி ஆய்வர். அம்மொழியில் பிறமொழிச் சொற்கள் உண்டு அதில் இலக்கணத் தெளிவு கிடையாது. அஃறிணை உயர்திணை இல்லை. ஆண் பெண்பால் வேற்றுமைச் சுட்டலும் கிடையாது. கலைச் சொற்களை இனிதான் பிறமொழிச் சொற்களைச் சேர்க்க வேண்டும். பயிற்றுமொழி ஆவதற்கான கலைச்சொற்கள் இல்லை. அறிவு இலக்கியங்களும் கிடையா. அம்மொழியை ஆட்சி மொழியாக ஏன் கூறுகிறார்கள்? சமற்கிருதம் பார்ப்பனர் மொழி எனக் கூறுகின்றனர். அம்மொழியைப் பார்ப்பனர் பேசி அதைத்தாய்மொழி என ஏற்றிலர். ஆயினும் அதை உயர்த்தும் செயலில் இயங்குகிறார்கள். ஏன்? பார்ப்பனருக்குத் தமிழ் சூத்திர மொழியாம். எனவே தமிழை ஒழிக்க சமற்கிருதத் தொடர்பு மொழி இந்தியைக் கொணரத் துடிக்கின்றனர். அதன் வழி தமிழை ஒழிக்கலாம் என மனப்பால் குடிக்கின்றனர். ஆகவே இந்தி பேசும் இந்தியர் மிகுதி. ஆகவே இந்தி ஆட்சிமொழி என இந்தியப் பார்ப்பனரும், இந்தியைத் தாய் மொழி என்பாரும் ஒற்றைக் காலில் நிற்கின்றனர். அரசு சொல்லும் இந்திக்கும் பேச்சுமொழி இந்திக்கும் வேற்றுமைகள் மிகுதி. ஏனெனில் இந்திபேசுவோரோடு ஏறத்தாழ 48 மொழிகளைப் பேசும் இந்திய மக்களைச் சேர்ந்தே இந்தி பேசுவோர் எனக்கணக்கெடுத்துக் காட்டுகின்றாரென இந்தி மொழி ஆய்வாளர்கள் கூறுகின்றனர். நேரு அவர்களும் **இந்தியைவிட ஆட்சி மொழியாவதற்கு தகுதிமொழி இந்தியாவிலிருப்பினும் இந்தி பேசுவோர் கூடுதலெனக் கணக்கிட்டுவிட்டபடியால் இங்கு ஆட்சிமொழி எனக் கூறும் நிலை வந்தது'** எனப்பேசியுள்ளார் உண்மையே அது. ஏனெனில் இந்தியரசில் சட்டத்தை முறைப்படுத்திய 1950-ல் இந்தி ஆட்சிமொழித் தகுதியைப் பெற 15 ஆண்டுகள் தேவை என்றனர் அதுவரை ஆங்கிலம் ஓர் இணைப்பு மொழியாக இருக்குமென்று 196் வரை இந்திய அரசு ஆங்கிலத்தை' இணைப்புமொழியாக ஏற்றது. ஆனாலும் இன்னும் இந்தி ஆட்சி மொழியாகும் தகுதியைப் பெறவில்லை. அதை ஆட்சி மொழித் தகுதியாக்க இந்தி இலக்கணத்தை செறிவுடையதாக்க பல மொழி வல்லுநரை அமர்த்திப் பலகோடி பணத்தைக் கொட்டி அதை ஆட்சி மொழித் தகுதிக்குக் கொண்டு வரலாம்.

இந்நிலையில் ஒரு வளமில்லா மொழியை வடநாட்டரசு ஒரே அடியாகப் புகுத்திச் சீரழிப்பது ஒரு மடைமையாகும். இந்தியாவை ஆங்கிலத் தாய்மொழியர் ஆண்டபோது, அவருடைய தாய் மொழி ஆங்கிலம் என்பதற்காக அதை ஆட்சி மொழியாக்கியதைப் போன்று, இந்தித் தாய்மொழியர் நம்மை ஆள்வதால் இந்தியை ஆட்சி மொழியாக்க எல்லாம் வல்ல ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்திச் செயல்படுகின்றனர்.

தமிழுக்குத் தாழ்ந்த நிலை :

இந்திக்கு வழங்கும் முகாமையான ஊக்கங்கள் தமிழ் மாநிலத்தில் தமிழுக்கில்லை. தமிழில் சிறந்தநூல் எழுதிய தமிழறிஞர்களுக்கு இந்திக்கு அளிப்பது போன்று பெருந்தொகையை வழங்குவது கிடையாது. தமிழ் வழிப்படிக்கும் கல்லூரி மாணவர்களுக்கு இந்திக்கு வழங்கும் உதவி தொகை கிடையாது. தமிழ்க் காவலர்களாகிய **பெருஞ்சித்திரனார், கி.ஆ பெ விசுவநாதன்** போன்றோருககு அரசு எவ்வகை உதவியும் செய்யவில்லை. **திராவிட மரபினர் தமிழ்நிலை ஆட்சிப் பொறுப்பில் கடந்த 20 ஆண்டுகளுக்குமேல் இருந்தும் கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாக்க முடியவில்லை. தமிழ்நாட்டுக் கோவில்களில் தமிழை வழிபாட்டு மொழியாக ஆக்க இயலவில்லை. ஆனால் இந்தியை எதிர்ப்பதாய்க் கூறிக்கொண்டு ஆங்கில வளர்ச்சிக்குத் தமிழக அரசு உதவுகிறது. ஆங்கிலத்தை நீக்கினால் இந்தி வரும் என்று பூச்சாண்டி காட்டுகிறார்கள்.** கோவாவில் ஆங்கிலத்தை அடியோடு நீக்கிவிட்டுக் கொங்கணி மொழியைப் பயிற்று மொழியாக வைத்து விட்டார்களே அவர்களெப்படிச் செய்தார்கள்? அங்கென்ன இந்தி போய் ஆங்கில இடத்தில் அமர்ந்தா கொண்டது? இல்லையே.

1957 காமராசு அவர்கள்' முதல்வராக இருந்தபோது ஆங்கிலம் அகன்றால் இந்தி வந்துவிடுமென்று கூறி அச்சமூட்டியது ஏமாற்றுக் கூற்றாகும். காமராசு பேராயக் கட்சி

அவருக்கு இந்தியை எதிர்க்க முடியாத கட்சிக் கட்டுப்பாடு உண்டு. அதற்கஞ்சியே இந்தியை எதிர்க்க ஆங்கிலத்தைக் கருவியாகப் பிடித்தார். அவ்வழக்கு இப்போதைக்குப் பொருந்தாது. இந்திய நீரோட்டத்தில் தமிழன் பதவி ஏற்கும் வரை தமிழைப் பயிற்றுமொழியாக்கவும் கோயில்களில் வழிபாட்டு மொழியாக்கவும் இயலா. நாற்காலியைப் பிடித்துக் கொள்ள வேண்டுமே! இந்திச் சிக்கலில் தமிழர்களை ஏமாற்றிக்கொண்டேதானிருக்க முடியும். தி.மு.க. அரசு இப்படிப்பட்ட பொருந்தா வழக்கைப் பேசிக்கொண்டேதானிருக்கும். இந்தியை நேரடியாக எதிர்த்துத் தள்ள முடியாது. இந்தியை எதிர்க்க ஆங்கிலத்தைக் கருவியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆங்கிலவழிக் கற்கும் சீர்மரபினருக்குக் கல்விக் கட்டணம் இல்லை என்று தமிழக அரசு அண்மையில் அறிவித்துள்ளது. (தினமலர் 29-7-90) இவ்வறிவிப்பு தமிழ்மொழியைக் காக்கும் செயலன்று. இப்படிப் பிறமொழிக்கு ஏற்றம் கொடுத்தால் தமிழைத் தமிழர்களே விரும்பார் தமிழை இந்திகொண்டு நடுவணரசு அழிக்கிறது. தமிழக அரசு ஆங்கிலத்தைக் கொண்டு தமிழின் வளர்ச்சியைக் கிள்ளி எறிகிறது.

இவ்வகை தமிழ் அழிப்புச் செயல்கள் தமிழ் நாடு இந்திய நீரோட்டத்தில் போய்க் கொண்டிருப்பதிலேயே ஏற்படுகிறது. தமிழ் நாடு தனியாகப் பிரியாமல் தமிழ் நாட்டில் இந்தியும் ஒழியாது; ஆங்கிலமும் போகாது; தமிழும் வளராது. எனவே நம் தாய்மொழியைக் காக்க — அதன் வளத்தைத் தமிழன் நுகர-தமிழ்நாடு பிரிந்தே ஆகவேண்டும் □

(6-ஆம் பக்கத் தொடர்ச்சி)

எங்களின் இதய தெய்வம் தொட்ட இடம் துலங்கும், கால்பட்ட இடந்தனில் வளம் கொழிக்கும் வரலாறு காணாத வெற்றியைப் பெற்றவர் எங்கள் தங்கத் தலைவி. அரசியல் வானில் ஒளிவீசும் விடிவெள்ளி.

குப்தர் காலம் பொற்காலம்; மவுரியர் காலம் பொற்காலம்—என்றெல்லாம் வரலாற்று ஏடுகளில் படித்துள்ளீர்கள். இதுவரை படித்தது போக, இனிவரும் காலங்களில், புரட்சித்தலைவியின் ஆட்சி வரலாற்று ஏடுகளில் புனிதமான ஆட்சி, பொற்கால ஆட்சி என்றெல்லாம் படிக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

அமைச்சர் **ஜெயக்குமார்**

இப்புகழ்ச்சி உளறல்கள் பற்றி அவாள் ஏட்டிலேயே வந்த ஒரு மதிப்பீடு!

o உறுப்பினர்கள் எந்த விஷயம் பற்றிப் பேசினாலும், ஜெயலலிதாவின் புகழ், பெருமை. மகிமை குறித்துச் சில நிமிடமாவது பேசத் தவறுவதில்லை. அதில் அ.தி.மு.க.— காங்கிரஸ் உறுப்பினர்களிடையே போட்டா போட்டி நிலவுவதையும் சில நேரங்களில் காணமுடிந்தது. **தினமலர் 29-9-91** (சென்னை)

அம்மையார் பதவிக்கு வந்தது பற்றிய தன்னிலை விளக்கம்

என்னுடைய ஆட்சியில் ஆடுகளை ஏமாற்றி ஓநாய்கள் இரத்தம் குடிக்க முடியாது. மிரட்டிச் சத்தம் போட முடியாது. ஏனென்றால், ஓநாய்களைச் சந்தித்துவிட்டு, வெறிநாய்களை வீழ்த்திவிட்டுத்தான் இந்த அரசு கட்டிலில் நான் அமர்ந்திருக்கின்றேன்.

—முதலமைச்சர் **செயலலிதா.**
அக். 2. காந்திசெயந்தி விழாவில்.

பாரதியார் சூழ்ச்சியாக வைத்த பெயரே பாரதிதாசன்

பாவேந்தர் சிறப்பாய்வரங்கம் ஒன்று தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் 29-4-91 அன்று சிறப்பாக நடைபெற்றது. அவ்விழாவில் தலைமையுரையாற்றிய அறிஞர் ப. அருளி அவர்கள் பாவேந்தர் பெயருக்குக் கொடுத்த வரலாற்று விளக்கம் சிறப்பாக அமைந்திருந்தது.

"பாரதிதாசன்" என்னும் பெயரைப் பாவேந்தர் அவர்கள் தமக்குத் தாமே சூட்டிக் கொண்ட புனைபெயர் என்றவாறு தமிழகமெங்கும் தவறான ஒரு கருத்து பரவியுள்ளது; நம்பப் பெற்றும் வருகின்றது! உண்மை அஃது அன்று.

புதுச்சேரியில் நெடுங்காலம் அவருடன் சேர்ந்து பணியாற்றிய பாவேந்தரின் நெருங்கிய நண்பர் மு. மாணிக்கம் என்பவர்- பாவேந்தரின் 55-ஆவது பிறந்த நாளுக்குச் சிறப்புச் செய்யும் வகையில் 1945-இல் யாத்து வெளிப்படுத்திய "பாரதிதாசன் சரித்திர வெண்பா" என்னும் பாநூலில் "பாரதிதாசன்" எனும் பெயர் எவ்வாறு ஏற்பட்டது என்னும் வரலாற்று உண்மையை முதற்பாடலில் முத்திரையிட்டுள்ளார். அதனை ஊன்றிக் கவனியுங்கள்.

"கண்டனன் ஓர்புலவன் என்போல் கவியியற்ற
பண்பட்ட செந்தமிழிற் பாடிடுவான்-
என்றறைந்தே
"பாரதிதா சன்" என்னும் பட்டப் பெயரளித்தார்
பார்புகழும் பாரதியார் தாம்!"

இதுதான் உண்மை! பாரதியார்தாம் பாவேந்தர்க்குப் "பாரதிதாசன்" என்னும் பெயரிட்டவர்! பெயரமைவு-'பாரதியடிமை' என்னும் வடிவில் இழிவுற அமைந்திருந்தாலும், பாரதியின்மீது தமக்கிருந்த அன்பினாலும் மதிப்புணர்வினாலும் நன்றியுணர்வினாலும் (எவ்வளவோ பேர்கள் மாற்றிக் கொள்ள அவரிடம் வேண்டிவலியுறுத்தியுங்கூட) இறுதிவரை அப்பெயரை மாற்றிக் கொள்ளாமல் அப்படியே இருந்துவிட்டார் பாவேந்தர் அவர்கள்!

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகச் செய்தி மலர்
மலர் 10 இதழ் 3(11-8-91)

Scanned with CamScanner

அறிஞர் பெருமக்களைக் குறைவாக மதித்து வாங்கிக் கட்டிக் கொள்ளாதீர்கள்!

தமிழக அரசுக்கு அறிஞர் சாலையார் கடும் எச்சரிக்கை!

சிறந்த பாவலரும், சீரிய தமிழ்நலச் சிந்தனையாளருமான **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்களைத் தமிழக அரசு தளை செய்து சிறைப் படுத்தி இருக்கிறது என்று கேள்விப்பட்டு மிகவும் கொதிப்படைந்து போயிருக்கிறார் அறிஞர் சாலை இளந்திரையன். செய்யத்தகாத செயல் என்றும் - அரசுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய செயல் என்றும் இந்த நடவடிக்கையைக் குறித்துக் கருத்துத் தெரிவித்த சாலையார், பெருஞ்சித்திரனாரின் தளைக்குக்-கடுமையான - கண்டனம் தெரிவித்து அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளார்கள். அந்த அறிக்கையில் அவர் தெரிவித்திருப்பதாவது:

''ஒரு நாட்டில் ஆட்சிக்கு வருகிறவர்கள் படித்தவர்களாக இருந்தாலும் படிக்காதவர்களாக இருந்தாலும், நாட்டு மக்களின் நெஞ்சமாக விளங்கும் அறிஞர் பெருமக்களை மதிப்போடு நடத்தக் கற்றுக்கொள்ள வேண்டும். கள்ளர்களையும், கயவாளிகளையும் மிரட்டிப் பிடிக்கிற காவலர்களை, அறிஞர்கள் மீது ஏவிவிடுவது தரங்கெட்ட செயல் என்பதை அரசியலார் நெஞ்சில் இருத்த வேண்டும். ஓர் அழகான பந்தலுக்கு உறுதி சேர்த்து அதை உயர்த்தி நிறுத்தும் ஊன்றுகால்கள் போல, ஓர் இன மக்களின் வாழ்வுக்கும்-வரலாற்றுக்கும் உறுதியும் உயர்வும் சேர்ப்பவர்கள் அவர்களிடையே பிறக்கும் அறிஞர்கள். பந்தலின் ஊன்றுகாலைப் பிடுங்கி அந்தப் பந்தலையே சாய்த்துவிடுவதுபோல,-நாட்டிலுள்ள-நல்லறிஞர்களைச் சிறுமைப்படுத்தி, அரசியலார் ஒரு நாட்டின் பண்பாட்டுக்கே இழிவுதேடிடக் கூடாது. யாரைத் தளை செய்கிறோம் என்ற ஓர்மையே இல்லாமல், அறிஞர் பெருமக்களின் மீது அரசு அதிகாரிகள் முரட்டுத்தனமாகக் கைவைத்திடக் கூடாது.

ஒரு நாட்டின் அறிஞர்கள் என்பவர்கள் நாட்டு மக்களின் நெஞ்ச ஒலிகள் மட்டுமல்லாமல், அந்த நாட்டுப் பண்பாட்டின் காவர்களுமாவார்கள். அவர்கள் பேசுகிற - மக்கள்நலக் கருத்துகள் தங்களுக்குப் புரியவில்லை என்பதாலோ, தங்களுக்குப் பிடிக்கவில்லை என்பதாலோ, ஆட்சியாளர்கள் அவர்கள் மீது பாய்ந்து அவர்களைச் சிறைச்சாலைக்கு இழுத்துக் கொண்டு போய்விடக் கூடாது; இந்தப் பொது நெறியை எதிர்த்து, 9-6-90 இல் தமிழ் அறிஞர் பெருமக்களைக் குறைத்து மதித்து அவர்களைத் தளை செய்து சிறைப்படுத்திய கருணாநிதி, அவருக்கு மிகமிக உவப்பான ஆட்சிப் பதவியையே இழந்து தெருவில் நிற்கிறார் என்பதை இன்றைய ஆட்சியாளர்கள் மறந்துவிடக்கூடாது.

பாவலரேறு பெருஞ்சித்திரனார் சீரிய தமிழ் இனநலச் சிந்தனையாளர்; எதையும் மறைத்து வைத்து மருட்டாத வெளிப்படையான தமிழ் அறிஞர் அவர். அவரைத் தளை செய்ததன் மூலம், தமிழக அரசு, தமிழ் அறிஞர் உலகத்தையும் சீரிய மாந்தப் பண்பாட்டையும் அடியோடு குறைவுபடுத்தி இருக்கிறது. இது அடாத செயல்; மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசுக்கு அடுக்காத செயல்! ஆகவே, பாவலரேறு அவர்களை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்று தமிழக அரசை வற்புறுத்துகிறேன்.''

இவ்வாறு கண்டித்து அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார் அறிவியக்கப் பேரவை அமைப்பாளர் பேராசிரியர் சாலை இளந்திரையன் அவர்கள்.

ஃ

சிந்தனைக்கு-66

முன்பு நாம் வீர இனம்; வரலாற்றுச் சிறப்புடைய இனம்; பண்பாடும் நாகரிகமும் பெற்ற இனம் என்று சொல்லிக் கொண்டிருப்பதால், நம் அடிமைத்தனம் நீங்காது; உரிமைகளை நீக்கவும், உரிமைகளைப் பெறவும் நாம் எழுந்து போராட வேண்டும்.

நூல் - அஞ்சல்

பெறுநர்

TN/MS(C) 657